தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 133/ந/2022
நாள் 02.10.2022

திரு. P.பெரியசாமி,
அரியலூர். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
அரியலூர் நகராட்சி. – எதிர் மனுதாரர்

அரியலூர், கீழத்தெரு, கதவு எண் 39 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.பெரியசாமி என்பவரின் 29.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.08.2022 அன்று பெறப்பட்டு 133/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

அரியலூர், கீழத்தெரு, கதவு எண் 39 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.பெரியசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"எனது தகப்பனார் திரு.P.பெரியண்ணன் என்பவர் அரியலூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த நிலையில் திடீர் உடல்நலக்குறைவின் காரணமாக சென்ற 12.09.2020 தேதியில் பணியிடை மரணமடைந்துவிட்டார். அவரது இறப்பையொட்டி இறப்புக்கால பயன்கள், வாரிசு வேலை வேண்டி முதல் கட்டமாக இறப்பு மற்றும் வாரிசு சான்று ஆவணங்களுடன் 09.11.2020 அன்று அரியலூர் நகராட்சி ஆணையர் அவர்களிடம் நேரில் விண்ணப்பித்துள்ளேன். பின்னர் கல்விச் சான்றாவணம் (TC) 23.02.2021 தேதியில் சமர்ப்பித்துள்ளேன்.

23.07.2021 தேதியில் ஒருங்கிணைந்த சான்றாவணங்களை ஆணையரிடம் நேரில் சமர்ப்பித்துள்ளேன். இதர வாரிசுதாரர்களின் ஆட்சேபனையற்ற பத்திரங்களும் சமர்ப்பித்துள்ளேன்.

மேற்கண்டவாறு சான்றாவணங்கள் சமர்ப்பித்து வந்துள்ள நிலையில் பின்னர் பிறப்பு சான்று வேண்டுமென்று நகராட்சி அலுவலகம் மூலம் சொல்லப்பட்டு, பின்னர் பிறப்பு சான்று வாங்கி, சென்ற 05.01.2022 தேதியில் நகராட்சியில் சமர்ப்பித்துள்ளேன்.

இவ்வாறாக மேற்கண்டவாறு உரிய அனைத்து சான்றாவணங்களும் சமர்ப்பித்துள்ள நிலையில், அதிக காலம் ஆகியும் கருணை அடிப்படையில் வாரிசு மகனாகிய

P.பெரியசாமி ஆகிய எனக்கு இன்னும் பணி நியமனம் வழங்கப்படாமல் இருக்கிறது. குடும்பம் மிகுந்த சிரமத்தில் வருமானமின்றி கஷ்ட நிலையில் இருந்து வருகிறோம்.

ஆகவே விரைவில் எனக்கு பணி நியமனம் (துப்புரவு பணி) வழங்கி உதவிட வேண்டுமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் அரியலூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

அரியலூர் நகராட்சி ஆணையாளர் தனது 16.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

''அரியலூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி வந்து பணியிடையில் காலமான திரு.P.பெரியண்ணன் என்பவரின் மனைவி திருமதி.பெ.அஞ்சலை என்பவர் தனது மகன் P.பெரியசாமி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி சமர்ப்பித்த 09.11.2020 மற்றும் 23.02.2021 நாளிட்ட விண்ணப்பங்களில் உரிய ஆவணங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சான்றிதழ் இன்றியே சமர்பித்திருந்ததால் அதனை வழங்கும்படி தெரிவிக்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து திரு.பெ.அஞ்சலை தனது 27.08.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் தனது மகன் திரு.பெ.பெரியசாமி, என்பவருக்கு கல்வித் தகுதியின் அடிப்படையில் தூய்மை பணியாளர் பணியிடம் வழங்க கோரியிருந்தார்.

அதன்படி அரியலூர் நகராட்சியின் 16.09.2021 நாளிட்ட கடிதத்தில் தூய்மை பணியாளர் பணியிடம் வழங்க கோரி உரிய ஆவணங்கள் மற்றும் சான்றுகளுடன் முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு நேரில் சமர்ப்பிக்கப்பட்ட போது, ஆவணங்கள் சரிபார்ப்பில் பிறப்பு சான்று கோரப்பட்டது. மேலும் மேற்படி பணியாளரின் வாரிசுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மாற்றுச் சான்றிதழ் நகலில் அடித்தல் திருத்தல் இருந்ததால் உண்மை தன்மை சரிபார்க்க அசல் சான்று சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு முன்மொழிவுகள் பெறப்படாமலே திருப்பி அனுப்பப்பட்டது. அதன்படி மேற்படி வாரிசுதாரரிடம் அசல் பிறப்பு மற்றும் கல்வி மாற்று சான்றிதழ் சமர்ப்பிக்கும்படி தெரிவிக்கப்பட்டதில், மேற்படி சான்றிதழ்கள் மனுதாரரால் 05.01.2022 அன்று நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களுடன் கருணை அடிப்படையில் தூய்மை பணியாளர் பணியிடம் வழங்கக்கோரி 01.03.2022 அன்று முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அதன் தகவல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் அரியலூர் நகராட்சி ஆணையரும் 21.09.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.08.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. P.பெரியசாமி, 21.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''அரியலூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த எனது தந்தை திரு. பெரியண்ணன் என்பவர் 12.9.2020 அன்று பணியிடையே காலமானார். அவரது மறைவைத் தொடர்ந்து அவரது வாரிசுதாரரான எனக்கு, அரியலூர் நகராட்சியில் கருணை அடிப்படையில் பணி வேண்டி உரிய காலத்தில் விண்ணப்பம் அளித்துள்ளேன். விண்ணப்பத்துடன் உரிய கல்வித் சான்றாவணம் மற்றும் ஒருங்கிணைந்த சான்று

போன்றவற்றை ஆணையரிடம் சமர்ப்பித்திருந்தும் எனக்கு இன்னும் கருணை அடிப்படையில் பணியாணை வழங்கப்படவில்லை. எனவே, எனக்கு கருணை அடிப்படையில் நகராட்சியில் வேலை கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான அரியலூர் நகராட்சி ஆணையாளர் 21.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"அரியலூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. பெரியண்ணன் என்பவர் 12.09.2020 அன்று பணியிடையே காலமானதைத் தொடர்ந்து அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு. பெரியசாமி என்பவர் உரிய காலத்தில் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பம் அளித்திருந்தார். அரியலூர் நகராட்சியின் பணியாளர்களுக்கான ஊதியச் செலவு மொத்த வருவாய் 49 சதவீதத்திற்கு மேல் உள்ளதால், மனுதாரருக்கு அரியலூர் நகராட்சியில் பணி வழங்க இயலவில்லை. மாறாக, தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் ந.க. எண் 695/2021/அ1 நாள் 20.9.2022 நாளிட்ட செயல்முறையில், மனுதாரருக்கு கருணை அடிப்படையில் ஜெயங்கொண்டம் நகராட்சி துப்புரவுப் பணியாளராக பணி நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட செயல்முறை ஆணையின் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், அரியலூர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

- அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. P.பெரியசாமி என்பவர், அரியலூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த அவரது தந்தை திரு. P.பெரியண்ணன் என்பவர் காலமானதை தொடர்ந்து, அரியலூர் நகராட்சியில் கருணை அடிப்படையில் தூய்மைப் பணியாளர் பணிநியமனம் வேண்டி தனது மனுவில் கோரியுள்ளார்.
- அரியலூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. P.பெரியண்ணன் என்பவர் 12.09.2020 அன்று பணியிடையே காலமானதைத் தொடர்ந்து அவரது வாரிசுதாரான அவரது மகன் திரு. P.பெரியசாமி என்பவர் கருணை அடிப்படையில் தூய்மைப் பணியாளர் பணிநியமனம் செய்யக் கோரி 09.11.2020 அன்று அரியலூர் நகராட்சியில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். ஆனால் மனுதாரர் சமர்ப்பித்த விண்ணப்பத்துடன் ஒருங்கிணைந்த சான்றிதழ் இல்லாததாலும், சமர்ப்பித்த ஆவண நகலில் அடித்தல் திருத்தல் இருந்ததன் காரணத்தினாலும் முழுமையான ஆவணங்கள் நகராட்சியில் பெறுவதற்கு 09.11.2020 தேதியிலிருந்து 05.01.2022 வரை ஏறக்குறைய 14 மாதங்கள் எடுத்து கொள்ளப்பட்டுள்ளதை ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது. மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் செய்த போதே சமர்ப்பிக்கப்படவேண்டி உரிய ஆவணங்களின் விவரங்களை நகராட்சி பணியாளருக்கு தெரிவித்திருந்தால் இவ்வாறு காலதாமதம் ஆகியிருப்பதை தவிர்த்து இருக்கலாம். தேவையற்ற காலதாமதத்திற்கு தமது கண்டனத்தை இம்முறைமன்ற நடுவம் பதிவு செய்கிறது. இருப்பினும், மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தஞ்சாவூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் 20.09.2022 நாளிட்ட செயல்முறைகள் வாயிலாக மனுதாரர் திரு. P.பெரியசாமி என்பவருக்கு கருணை அடிப்படையில் ஜெயங்கொண்டம் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணி நியமனம் செய்ய பரிந்துரை செய்து உத்தரவிட்டுள்ளதை ஆவணத்தின் மூலம் அறியமுடிகிறது.

- இதில் ஒரு ஆண்டு காலதாமதம் ஏற்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது. இதற்குரிய சாக்கு போக்கு காரணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. இதில் ஏற்பட்டுள்ள அநீதியும், காலதாமதமும் கண்டனம் செய்யப்படுகிறது. இந்த மனு மன்றத்திற்கு அளிக்கப்படாமல் இருந்திருந்தால் நகராட்சி ஆணையரும், மண்டல நிர்வாக இயக்குநரும் இதில் கவனம் செலுத்தி இருக்க மாட்டார்கள் என்ற கருத்தை இம்மன்றம் பதிவு செய்கிறது.

- தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் பரிந்துரைத்துள்ள நிலையில் மனுதாரர் திரு. P.பெரியசாமி என்பவரை கருணை அடிப்படையில் தூய்மைப் பணியாளராக ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஒரு மாத காலத்திற்குள் பணிநியமனம் செய்து அதன் அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

- இனி வருங்காலங்களில் இதுபோன்ற கருணை அடிப்படையிலான நியமனம் குறித்தான நேர்வுகளில் கருணை உள்ளத்துடன் மனுவினை பரிசீலனை செய்திடவும் தேவையற்ற காலதாமதத்தை தவிர்த்திடும் வகையிலும் உரிய அறிவுரைகளை நகராட்சி பணியாளர்கள் / அலுவலர்களுக்கு வழங்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.P.பெரியசாமி,
   க.எண். 39, கீழத்தெரு, அரியலூர் 621 704.

2) ஆணையாளர், அரியலூர் நகராட்சி,
   அரியலூர் 621 704.

3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   தஞ்சாவூர்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   (பெயரியிடப்பட்ட உரையில்)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

06/10/22
செயலாளர்.

06/10/22